எனவே, அவர்களாகவே கேட்டுக்கொள்ளும் அந்தத் திட்டங்களில் குடியமர்த்துகிறோம். ஆகவே, தவறு அவர்களுடையதுதானே தவிர, எங்களுடையது அல்ல.

Death of cattle in Taramani village

* 140 *Q.*—THIRU S. J. **SADIQ PASHA**: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it has come to the notice of the Government regarding the sudden death of a number of Cattle in Taramani village near Adyar, Madras, recently; and

(*b*) if so, the reasons therefor and the remedial measures taken in this regard ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) தரமணி கிராமத்தின் அருகிலுள்ள தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரை இரசாயன பரிசோதனை செய்ததில் அதில் "பாலிடால்" (Follidol) என்னும் பொருள் கலந்து இருப்பதாக அறியப்பட்டது. மேற்கூறிய பாலிடால் என்னும் விஷப் பொருளே கால்நடைகள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என புலனாய்வு அறிக்கை கூறுகிறது. சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் மேற்கூறிய விஷப் பொருட்கள் மேற்கூறிய இடத்தில் கல்வாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வப்போது அந்தப் பகுதிகளில் உள்ள தண்ணீரை பரிசோதனை செய்யுமாறும் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS

சென்னை காவலர் குடியிருப்புகளுக்கான மின் கட்டணங்கள்.

வினா எண். 140 (அ)—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் காவல் துறையினர் குடியிருக்கும் அரசுக்குச் சொந்தமான குடியிருப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் சலுகை அளிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு உயர்ந்த பட்சமாக மாதம் ஒன்றுக்கு 20 யூனிட்டுகள் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு இலவசமாக வழங்கப்படும் 20 யூனிட்டுகளுக்கான மின்சாரக் கட்டணச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது. 20 யூனிட்டுகளுக்கு மேல் கூடுதலாக மின்சாரம் செலவிடும் காவலர், அல்லது தலைமைக் காவலர்களிடம் அதற்கான கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா எண் 140-ஆ.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நான் ஒரு துணைக் கேள்வி அதில் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அடுத்த கேள்விக்குப் போய் விட்டேன். திரு. சாதிக் பாட்சா அவர்கள் இல்லாததால் அடுத்த கேள்விக்கு போய்விட்டேன். இப்பொழுது உங்களுக்குத் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுத்தால் பிறகு எல்லோரும் அதையே பின்பற்றுவார்கள். ஆகவே, இன்றைக்கு இதோடு விட்டு விடுங்கள், நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

கேரளத்திற்கு கடத்திச் செல்லப்பட்ட நுகர்பொருள் வினியோக அலுவலர்

***வினா எண். 140ஆ.— திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள மதுக்கரை அருகே கேரளத்துக்கு அரிசி கடத்திச் செல்லும் ஒரு லாரியை மடக்கிய சிவில் சப்ளை அதிகாரி ஒருவரை கேரளத்துக்கு கடத்திச் சென்றதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இச்சம்பவத்தையொட்டி, அரசு ஊழியர் ஒருவர் உட்பட சம்பந்தப்பட்ட 8 நபர்கள் மீது மதுக்கரை காவல் நிலையத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இதில் சம்பந்தப்பட்டுள்ள அரசு ஊழியர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். புலனாய்வுக்குப் பின்பு இவ் வழக்கு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.